ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18 ] விபவ ஹூ, சித்திரை மீ [ஸஞ்சிகை 7

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா

['ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

## ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யமும் மோக்ஷ ஸ்வரூபமும்.

[ஸ்ரீ. உப. வித்வான். தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி.]

ப்ரஹ்ம ஸ்ருஷ்டியில் அடங்கி யிருக்கிற பகுத்தறிவுள்ள எல்லாச் சேதந வர்க்கங்க ளிடத்திலும் மாதா பிதாக்களை விட நூறு மடங்கு வாத்ஸல்யாதிசய முள்ள வேதமானது இஷ்டாநிஷ்டங்களையும் ஹிதாஹிதங்களையும் நன்கு துலக்கிக் காட்டி, விதி நிஷேத முகத்தால் முறையே அவற்றில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் உண்டுபண்ணி, ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸுகளை எல்லோருக்கும் பயப்பதில் காமதேநு போல் விளங்குகிற தென்கிற விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே. அபௌருஷேயமான இந்த ச்ருதியின் கருத்தை உள்ளபடி அறிவதற்கு அஸமர்த்தர்களாக இருக்கிற மநுஷ்யர்களை உத்தேசித்தே அந்த ச்ருதி ப்ரதிபாத்யனான ஸ்ரீமந் நாராயணனே க்ருஷ்ணத்வைபாயந ரூபமாக அவதரித்து ப்ரஹ்ம ஸூத்ரங்களைச் செய்தருளினான்.

'𑌅𑌲𑍍𑌪𑌾𑌕𑍍𑌷𑌰 𑌮𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧𑌂 𑌸𑌾𑌰𑌵𑌦𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌮𑍍। 𑌅𑌸𑍍𑌤𑍋𑌭𑌮𑌨𑌵 𑌦𑍍𑌯𑌂 𑌚 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃' என்கிற ஸூத்ர லக்ஷணம் இந்த ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கே பொருத்தமுள்ளது. ஸமந்வயாவிரோத ஸாதந பலாத்யாயங்க ளென்கிற நான்கு அத்யாயங்களாலும், ஒவ்வொரு அத்யாயத்திற்கும் நான்கு பாதங்களாக நான்கு அத்யாயங்களுக்குமாகப் பதினாறு பாதங்களாலும் அலங்கரிக்கப்பட்டு இந்த ப்ரஹ்ம ஸூத்ரம் ஜகத்தில் ப்ரகாசித்து வருகிறது. ஸூத்ரங்களின் ஸங்க்யை ஐந்நூற்று நாற்பத்தைந்து. அதிகரண ஸங்க்யை நூற்றைம்பத்தாறு. இந்த ஸூத்ரங்களுக்கு அநேகர் பாஷ்யம் செய்திருக்கின்றனர். அவைகளுள் பகவத் ராமாநுஜ பாஷ்யம் ஒன்று. அது ஸூத்ரத்திற்கு அத்யந்தம் அநுகுணமானது; ஒவ்வொரு அக்ஷரத்தின் ஸ்வாரஸ்யத்தைப் பர்யாலோசித்து, ஸ்ரீ வ்யாஸ பகவானுடைய உட்கருத்தை நன்கு உணர்ந்து அபிநிவேச மின்றிச் செய்யப்பட்டிருக்கிறது. அது யுக்திக்கும் ப்ரமாணத்திற்கும் பொருந்தாத ப்ரயோஜந மற்ற வசநமன்று. ஸ்ரீ பாஷ்யகாரர் தாமே க்ரந்தாரம்பத்தில் '𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇' என்று அருளிச் செய்திருக்கிறார். விஷய வாக்ய ப்ரத்யபிஜ்ஞாபகமான ஸூத்ராக்ஷரங்களால் ஸூத்ரங்களுக்கு லக்ஷ்யங்களான விஷய வாக்யங்களைத் தவறாம லெடுத்து, ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான ஸதர்த்தங்களை லோகாநுக்ரஹார்த்தமாக வெளியிட்டிருக்கிறார். தாத்பர்ய நிர்ணாயகங்களான உபக்ரமோபஸம்ஹாராதி லிங்கங்களைக் கொண்டு யதாவத்தாக ச்ருத்யார்த்த நிர்ணயம் செய்தருளி யிருக்கிறார். தத்வ ஹித புருஷார்த்த ப்ரதிபாதகமான அத்யாத்ம சாஸ்த்ரத்தில் அவச்யமாக நிரூபிக்கத்தக்க சிதசிதீச்வர தத்வங்களின் ஸ்வரூப ஸ்வபாவ ப்ரவ்ருத்திகள் அதில் ஸப்ரமாணங்களாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அநுக்ராஹக தர்க்கங்களாலும் ப்ரமாணங்களாலும் ப்ரமேய ஜாதங்கள் ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமான நீதியினால் உபபாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த பாஷ்யம் ஸ்வோபஜ்ஞ மன்று. பகவத் போதாயநாதிகளான மஹர்ஷிகளால் ப்ரவர்த்திக்கப்பட்டுள்ள வ்ருத்தி க்ரந்தம் முதலிய ஆர்ஷ ஸூக்திகளையே அநுஸரித்தும், [illegible] வைதேசிகர்களான மற்றுமுள்ள பரமாசார்யர்களின் ஸாரதமங்களான வாங்மயங்களை ஆதாரமாகக் கொண்டும், இந்த ஸ்ரீ பாஷ்ய சந்த்ர மண்டலமானது யதிராஜ ரூபமான உதயகிரியி லுதித்து, தத்வார்த்தங்களாகிற கிரண ஜாலங்களால் அஜ்ஞாநம் அந்யதா ஜ்ஞாநம் ஸம்சயம் என்ற அந்த தமஸத்தை நீக்கி, ஸத்பதத்தை ப்ரகாசப்படுத்தி முமுக்ஷுக்களாகிற சகோரபக்ஷிகளை த்ருப்தியடையச் செய்துகொண்டு, அஸ்தமய கதை இல்லாமலே அநவரதம் ஜாஜ்வல்யமானமாக இருந்து வருகிறது. ப்ரத்யக்ஷாநுமாந சப்தங்கள் மூன்றே ப்ரமாணங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஈச்வர தத்வத்தை ஸாதிப்பதில் சப்த மொன்றே ப்ரமாண மென்று

ஸ்வாமி திருவுள்ளம் பற்றி யிருக்கிறார். அசஞ்சலங்களான யுக்திகளாலும் ப்ரமாணங்களாலும் சிதசித் விஷிஷ்டாத்வைத தத்வம் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. டங்கர் த்ரமிடர் குஹதேவர் பாருசி ப்ரம்ஹ நந்தி முதலிய ப்ராசீநர்களுடைய ஸத் ஸித்தாந்தத்தைத் தழுவிய ஸர்வ விஜ்ஞாநங்களுக்கும் யாதார்த்யம் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வாப்ந ஜ்ஞாநம் அனைத்தும் யதார்த்த மென்றும், ஸ்வப்நாவஸ்தையில் அநுபவிக்கப்படுகிற வஸ்துக்கள் அனைத்தும் மாயிகங்க ளல்ல வென்றும், அவைகள் அனைத்தும் அந்தந்த ஜீவன்களின் புண்ய பாபாநுகுணமாகத் தத்கால மாத்ராநுபாவ்யங்களாகப் பரம புருஷனால் ஸ்ருஷ்டிக்கப் படுகின்றன வென்றும், ச்ருதி ப்ரமாணங்களால் ஸம்யக் நிரூபணம் பண்ணி, மதாந்தரஸ்தர்களால் இது விஷயமாகச் செய்யப்பட்டுள்ள ஸித்தாந்தங்களைத் தூரீகரித்தார். பரிணாம வாதத்தை ஆதரித்து, ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மத்துக்கு உபாதாநத்வத்தையும் ஸ்தூல சிதசித் விசிஷ்டமான அதே ப்ரஹ்மத்துக்குக் கார்யத்வத்தையும் ஸாதித்து, சிதசித் ரூபங்களான விசேஷணங்களி லுள்ள விகாராச்ரயத்வமும் அபுருஷார்த்தாச்ரயத்வமும் விசேஷ்ய பூதமான ப்ரஹ்மத்தை அணுகமாட்டா வென்பதையும் ஸத்ருஷ்டாந்த யுக்திகளாலும் அபௌருஷேய ஸூக்திகளாலும் ஸ்தாபித்திருக்கிறார். அபாவ மென்பது தனியான ஒரு பதார்த்த மென்றும், அது ப்ராகபாவம், ப்ரத்வம்ஸாபாவம், அத்யந்தாபாவம், அந்யோந்யாபாவ மென்று நான்கு விதமாக இருக்கிற தென்றும், அநுபலப்தி ப்ரமாணத்தால் அது அறியத்தக்க தென்றும் சொல்லுகிற நையாயிக மதத்தை ஸ்வாமி அஸமீசீந மென்று திருவுள்ளம்பற்றி, அபாவ மென்பது பாவாந்தர ரூபமாதலால் அந்த அபாவ ஜ்ஞாநத்துக்கு ப்ரத்யக்ஷத்தில் அந்தர்ப்பாவத்தைச் சொல்வது யுக்தமென்றும், பூதலத்தில் கடாத்யந்தாபாவம் பூதலரூப மென்றும், கடப்ராகபாவமானது ம்ருத்தே என்றும், கடத்வம்ஸம் கபால மென்றும், கடபடாந்யோந்யாபாவம் கடபடரூப மென்றும் ஸாதித்திருக்கிறார். உத்பத்தி யென்பது அவஸ்தாந்தராபத்தி என்றும், நாசமென்பது உத்தராவஸ்தா ப்ரஹாண பூர்வகமாக ப்ராக்தநாவஸ்தா ப்ராப்தி என்றும், உபாதாந காரணத்வமாவது ஸாவயவஸ்யா யொழிசேஷ ஸதி வடிவஷாவஸ்யா ச்ரயத்வ மென்றும் நிரூபித்திருக்கிறார். பூர்வோத்தர மீமாம்ஸைகளுக்கு ஐகசாஸ்த்ர்யத்தையும் ஸ்தாபித்தார். 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற ஸூத்ரம் தொடங்கி, 'அநாவ்ருத்தி: ஶப்தாத் அநாவ்ருத்தி: ஶப்தாத்' என்கிற ஸூத்ரம் வரையில் மீமாம்ஸாசாஸ்த்ர மொன்றே. இதில் ஜைமினி மஹர்ஷியினால் செய்யப்பட்டுள்ள கர்ம காண்டத்தைச் சார்ந்த பன்னிரண்டு அத்யாயங்களும் காசக்ருத்ஸ்ந மஹர்ஷியினால் செய்யப்பட்டுள்ள தேவதா காண்டத்தைச் சார்ந்த நாலு அத்யாயங்களும் அடங்கி யிருக்கின்றன.

இத்தேவதா காண்டத்தை ஸங்கர்ஷ காண்டமென்றும் சொல்லுவார்கள். வ்யாஸ மஹர்ஷியினல் செய்தருளப்பெற்ற ப்ரஹ்ம காண்டத்தைச் சார்ந்த நான்கு அத்யாயங்களும் இதில் அடங்கி யிருக்கின்றன. ஆக மொத்தம் இருபது அத்யாயங்களும் சேர்ந்து ஒரே சாஸ்த்ர மென்பதுதான் ப்ராமாணிக மதம். இம்மாதிரி விசிஷ்டத்துக்கு ஐக சாஸ்த்ர்யத்தை ஸமர்த்தித்துப் பூர்வாசார்யர்களின் அபிஸந்தியை ஸ்ரீ பஷ்யகாரர் தலைக்கட்டினர். பூர்வ பாகமான பதினறு அத்யாயங்களும் பகவதாராதந ரூபமான கர்மாக்களையும் தேவதைகளையும் ப்ரதிபாதிக்கின்றன. உத்தர பாகமான நாலு அத்யாயங்களும், ஆராத்யமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கின்றன. சேதநர்களையும் அசேதநங்களையும் சரீரங்களாகக் கொண்ட ஸர்வ சரீரியான பரமபுருஷனுடைய ஸ்வரூபம யதாவத்தாக உபபாதிக்கப்பட்டிருக்கின்றது. ஸர்வ ச்ருதிகளுக்கும் ஸாமஞ்ஜஸ்யம் இந்த ஸித்தாந்தத்திலேயே ஸாதிக்கப்பட்டிருக்கிறது. நிர்க்குண ச்ருதிகள் ஹேயகுண நிஷேத பரங்களென்றும், ஸகுண ச்ருதிகள் முக்யார்த்த ப்ரதிபாதகங்களென்றும், அத்வைத ச்ருதிகள் விசிஷ்ட விஷயங்களென்றும், பேத ச்ருதிகள் தாத்விகார்த்தோபபாதகங்களென்றும் விஷய விபாகங்களை ஏற்படுத்தி, எல்லா ச்ருதி வாக்யங்களுக்கும் ஸார்த்தக்யத்தை உள்ளபடி கல்பித்து, ப்ராமாணிகாக்ரேஸரதையையும் ஆஸ்திகாக்ரகண்யதையையும் ஸ்வாமி சிரோபூஷணமாக அணிந்தார்.

இந்த அத்யாத்ம சாஸ்த்ரத்திற்கு முக்ய பலமான பரம புருஷார்த்த ஸ்வரூபத்தை ஆசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கிற வண்ணம் நிரூபிக்க அவகாசத்தைச் சற்று வேண்டுகிறேன. அபவர்க்கமென்று சொல்லப்படுகிற இந்தப் பரம புருஷார்த்தமானது புறச் சமயத்தார்களாலும் அகச் சமயத்தார்களாலும் பற்பல விதங்களாகக் கூறப்பட்டிருக்கிறது. ப்ராக்ருதங்களான எல்லா ஸுகங்களும் நச்வரங்களானதால் அவைகளெல்லாம் ஹேய புருஷார்த்தங்கள். அந்த அபவர்க்கமானது அநவதிக ஸுகரூபமாகவும் சாச்வதமாகவு மிருப்பது பற்றிப் பரம புருஷார்த்தமென்று சொல்லப்படுகிறது. நிச்சிதமான ச்ரேயஸ்ஸானதால் இது நிச்ரேயஸம் என்றும் சொல்லப்படுகிறது. கர்மபந்தத்திலிருந்து விடுபட்டு ஸ்தாந விசேஷத்தை அடைந்தே அநுபவிக்கவேண்டிய ஸுகமாக இருத்தலால் இதை மோக்ஷமென்று சொல்லுகிறர்கள். "[illegible] மோக்ஷணே" என்கிற தாதுவின் அடியாக இந்த மோக்ஷ சப்தம் நிஷ்பந்நமாகிறது. இந்த அபவர்க்கத்தை (அதாவது முக்தியைக்) கொடுக்கும் பரமௌதார்ய முள்ளவன் ஸ்ரீமந் நாராயணனே '[illegible]' ॥ என்கிற

வசநமானது இதில் ப்ரமாணமாக ஆச்ரயிக்கத்தக்கது. இக்காரணத்தினு லேயே பகவானுக்கு 'முகுந்தன்' என்று திருநாமம் வாய்ந்தது. 'முக்திம் ததாதி'. அல்லது 'முஶ்ச குஶ்ச முகு:'—[மு—என்றால் முக்தி; கு, என்றால் பூமி அதாவது ஐஹிக போகங்கள்] இவைகளை அளிக்கும் திறமை வாய்ந்தவனானதால் பரம புருஷன் முகுந்த னென்று சொல்லப்படுகிறான். இது பங்கஜம் முதலிய பதம்போல் யோகரூடமான பதம். இந்தப் பரம புருஷனைத் தவிர்த்து ஒரு தேவதைக்கும் இந்த நிர்வாண சப்த வாச்யமான பரமாநந்தத்தைக் கொடுக்கும் ஸாமர்த்யம் கிடையாது. சார்வாகர்கள் ஸ்ரக் சந்தந வநிதாதிகளை அநுபவிப்பதா லுண்டாகும் ஆநந்தமே மோக்ஷ ஸுக மென்று சொல்லுகிறார்கள். பௌத்தர்கள் ஸுக துக்கங்கள் இரண்டையு மிழந்து, பாஷாண ஸ்தாநீயனான ஜீவனுடைய நிலைமையை மோக்ஷ மென்கிறார் கள். ஜைநர்கள், ஜலத்தில் சொரைக் குடுக்கையை எவ்வளக்கு எவ்வளவு அமிழ்த்துகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு மேலே எழும்பி வருகிற மாதிரி யாக, எப்பொழுதும் ஜீவன் இடைவிடாமல் மேல்நோக்கிச் செல்வதே மோக்ஷ மென்கிறார்கள். சைவர்கள், ஜீவவர்க்கங்கள் இருவினைகளையும் விட்டு நைஷ் கர்ம்யத்தை அடைந்து ப்ராப்யனான பரமசிவனுடைய நடநார்த்தமாக மேலே தூக்கப்பட்டிருக்கிற குஞ்சிதபாதத்தின் நிழலில் பிரித்தறியப்படா வண்ணம் ஒன்று கலந்து போகுதல் மோக்ஷ மென்கிறார்கள். மாயாவாதிகள். 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம', 'தத்த்வமஸி' 'அஹம் ப்ரஹ்மாஸ்மி', இவை முதலிய அத்வைத ச்ருதி வசநங்களால் உண்டாகிற ஜ்ஞாநத்தால் (மஹாவாக்யார்த்த ஜ்ஞாநத் தால்) சரீர பந்த மிருக்கும் பொழுதே ஜீவனுக்கு ஸம்பவிக்கிற 'நான் ப்ரஹ் மம்' என்கிற ப்ரஹ்மாபேத ஜ்ஞாந ரூபமான ஜீவன்முக்தி தான் மோக்ஷ மென்கிறார்கள். த்வைதிகளோ வென்றால் பத்த தசையில் ஜீவர்களுக்குக் கர்மாநுகுணமாக வருகிற ஸுக துக்காநுபவங்களின் தாரதம்யத்தைக் கொண்டே முக்தி தசையிலும் ஆநந்த தாரதம்யத்தைச் சொல்லி, ஜீவர்க ளுக்கு முக்த தசையில் பர ப்ரஹ்மத்தோடு பரம ஸாம்யத்தைச் சொல்லுகிற ச்ருதிகளை முற்றிலும் மறந்தார்கள். பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்திலோ அபவர்க்க மென்பது பரமாநந்தமயமா யுள்ளது. முக்தி அடைந்திருக்கிற ஜீவன்களுக்கும் ப்ரஹ்மத்துக்கும் போகத்தில் கொஞ்சமேனும் தாரதம்யம் கிடையாது. 'போகமாத்ர ஸாம்ய லிங்காச்ச' என்கிற ஸூத்ரகாரருடைய வசநம் இது விஷயத்தில் ப்ரமாணம். இந்த ஸுகமானது அப்ராக்ருதமான ஸ்தாந விசேஷத்தை அடைந்தே அநுபவிக்கத்தக்கது. போகாநுபவ ஸ்தா நம், போக்யமான பகவத் ஸ்வரூபம், பகவத் விபூதி பூதமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமான ஜீவ ஸ்வரூபம், இம்மூன்றும் பரமபத சப்தத்தால் சொல்லப்படு கின்றன.

இவ்வநுபவ முண்டானால் இதற்கு ஒரு காலத்திலும் அழிவு கிடையாது. ஸர்வோத்தமமான இந்த ஸ்தாநத்தை அடைந்து, அபஹத பாப்மத்வாதிகளான குணங்களின் ஆவிர்ப்பாவத்தோடு பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் செய்துகொண்டிருக்கிற ஜீவவர்க்கங்களுக்கு மீண்டும் ஸம்ஸார மண்டலத்தில் திரும்பி வருதலென்பது ஸம்பவிக்கிறதில்லை.' இந்த விஷயத்தில் 'ஞாவயூதெ வஈஂ யாஂ யதொ நாவதூ'தெ யதிஃ। ஊ'ஷெதூ வ–ந ஜ–ஜ உ–ஃவாஜுயஂ மாஜ்வுதம்। நாவ்ருவஞி ஊஹாதூநஃ ஸஂஸிஷிஂ வஈஂ மதாஃ। குப்ஹு ஹவநாஜொகாஃ வ–நமாவதி–தொஜ–ந। ஊ'ஷெதூ த–களஞெய வ–நஜ–ஜ ந விஃதெ।' 'யதாஹ கெவஸ்ரீ ஹுத ஷ்வஸிஂம உந–வயூதி। தமா ஹ ஹவ–ஂ விஜூவாஸ வ–நஜ–ஜ ந விடிதி। மவா மவா நிவத–ஜெ அந்ருஜமஜூாமொ ஞுஹாஃ। கூதாவி ந நிவத–ஜெ ஆஜமாக்ஷர தஸகாஃ।' என்கிற வசநங்கள் ப்ரமாணம். ஸ்ரீவிஷ்ணு லோகாதிகளில் ஸாலோக்ய ஸாரூப்யாதி மாத்ரத்தைப் பெற்றிருக்கிற ஜீவன்களை முக்தர்களென்று சொல்லுவது, ஸாயுஜ்ய மென்கிற முக்திக்கு ஸமீபித்திருக்கிற தேசவாஸத்தால் ஔபசாரிகமாம். ஸாலோக்யம் ஸாரூப்யம் ஸாமீப்யம் இவைகள் முக்திகளாகா; ஸாயுஜ்ய மொன்றே முக்தி யாகும். ஸாலோக்யம் முதலியவைகள் சத்ரிச்சந்யாயத்தால் ஸாயுஜ்யத்தில் அந்தர்ப்பூதங்கள். இதில் 'ஜொகெஷ– விஷெண நி–வஹஞி கெசிஃ ஹரீவ ஊஜூஷிஅ கெசிஃநெூ। அநெூதூ–ஂவஂ ஹஜ ஹஜஞெ ஹாய–ஜூ உநெூ ஹத–ஜொக்ஷ உக்தஃ।' என்கிற வசநம் ப்ரமாணம். இதற்கு 'ஜொக்ஷஂ ஹாஜொகூ ஹாஈவஷூ வ்ராஜ–யெ ந கஜாவந। உஹூாஜூஹஂ ஊஹாஜவாஹொ ஹாய–ஜூஂ தவ ஹ–வ்த।।' என்று வேறு வசநமும் உண்டு 'ஸமாநம் யதா ததா ஹொமெ யூநக்தி உதி ஹயுக்' என்று ப்ரஹ்மத்தோடு ஸமாநமாக போகத்தில் அந்வயிக்கிறானென்பதனால் முக்த ஜீவனை 'ஸயுக்' என்று சொல்லுகிறார்கள். 'ஹய–ஜொ ஹாவஃ ஹாய–ஜூஂ'. ஸாயுஜ்ய மென்பது ப்ரஹ்மம் முக்தஜீவன் இவ்விருவர்களுக்கும் போக்தவ்ய மான வஸ்து விஷயத்தில் விசேஷமில்லாமை. 'ஹாஷி–தா' என்பது இருவர்களுக்கும் போகத்தில் தாரதம்ய மில்லாமை; 'ஹாய–ஜூ ஊஹயொ ஈது ஹொதவ்யூஹூா விமிஷ்டா। ஹாஷி–தா தது ஹொமஹூ தாரதஜூ விஹீநதா।।' என்கிற வசநம் இதற்கு ப்ரமாணம். 'ஹாஊஈ ஹூஂஹி ஹாய–ஜூஂ வதஞி ஜ்ரஹ்வாதிநஃ' என்பது சாகடாயநர் வசநம். ஸாயுஜ்ய சப்தமானது ஸாதர்ம்ய பர்யாய மென்று ப்ரஹ்மவாதிகள் கூறுகின்றனர். 'ஊஊ ஹாயஊூ–ஂ ஊமதாஃ' என்று கீதாசார்யனும் உபதேசித்தான். முக்தனை ஸ்வராட் என்று சொல்லுவது அகர்ம

வச்ய னென்கிற அபிப்ராயத்தால். ஐக்யம் தோன்றின இடங்களி லெல்லாம் ஸாம்யத்தைச் சொல்லுகிற ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ரங்களுடைய கருத்துக்கு விரோதமின்றி ஸாதர்ம்யமே அர்த்தமென்று சொல்லவேண்டும். ப்ரஹ்மத்துக்கும் முக்தாத்மாவுக்குப் போகமாத்ரத்தால் ஸாம்யமே ஒழிய மற்ற ஜகத் ஸ்ருஷ்டி ஸ்தித்யாதி கார்ய கர்த்ருத்வத்தால் ஸாம்யம் கிடையாது. ஜகத் காரணத்வம், மோக்ஷ ப்ரதத்வம், ஸர்வாதாரத்வம், ஸர்வநியந்த்ருத்வம், ஸர்வ சேஷித்வம், ஸர்வ சரீரித்வம், ஸர்வசப்த வாச்யத்வம், ஸர்வ வேத வேத்யத்வம், ஸர்வலோக சரண்யத்வம், ஸர்வ முமுக்ஷூபாஸ்யத்வம், ஸர்வ பல ப்ரதத்வம், ஸர்வ வ்யாப்த ஜ்ஞாநாநந்த ஸ்வரூபத்வம், லக்ஷ்மீ பதித்வம் ஆகிய இந்தக்குணங்களெல்லாம் பர ப்ரஹ்மத்துக்கே அஸாதாரணங்கள். முக்தனுக்குப் பகவத் தாஸத்வம் முக்தி தசையிலு முண்டு. ‘தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:’ என்கிற வசநம் இதற்கு ப்ரமாணம். ஜக்ஷணம் க்ரீடநம் ப்ரக்ருதிமண்டல ப்ரவேசம் முதலியவைகள் முக்தாத்மாவுக்குப் பகவதிச்சாதீநமான இச்சா விசேஷத்தால் ஸம்பவிக்கிறதாதலால் கர்ம வச்யத்வ சங்கைக்கு இடமில்லை. இந்தப் பரமபதத்தை அடைந்து அகண்ட பரிபூர்ண ப்ரஹ்மாநந்தத்தை அநுபவிப்பவர்களுக்குப் பரமபத கமந மார்க்கம் அர்ச்சிராதி மார்க்கமே. தூமாதி மார்க்கத்தால் செல்பவனுக்கு ஸ்வர்க்காநுபவமும் பித்ரு லோகாநுபவமும் ஸித்தம். நரகாநுபவத்துக்கு ஆள்பட்டவர்களாக இருக்கிற பாபிகளுக்கு யமநகரத்தை நாடுகிற மருகாந்தார மார்க்கம் விதிக்கப்பட்டிருக்கிறது..............................................................................

பக்தியினாலோ ப்ரபத்தியினாலோ வசீகரிக்கப்பட்டிருக்கிற பரம புருஷனுடைய பரமக்ருபையினால் கர்ம பந்தத்தினின்று விடுவிக்கப்பட்ட ஜீவ வர்க்கங்களால் அப்ராக்ருத ஸ்தாந விசேஷத்தை அடைந்து அநுபவிக்கத் தக்கதான அகண்ட பரிபூர்ண ப்ரஹ்மாநந்தமே முக்தி என்பது ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தம்.

“ துயிஜயி நிஷ்த்ஷ ஷ்உதி உஂயஶாரொபநூக. ஷஉஊ்ரத ஷயாரஷ வ்ருதிஹடி ஷ்ஹாஷ்யோ உஹாநு । வ்ருஷீஉதா யதீஶ்வரா: வ்ருணத வாஸிஜாத: க்ருவாதஸ்ரீதஉ்ரமஉஷ்வஜ: க்ருவணெ்தகதாநெ உயி ॥ ”

ஸ்ரீ:

## ஊழ்

[ம-ரா-ரா-ஸ்ரீ கே. நாராயண ரெட்டியார்.]

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" (திருக்குறள்,)

என்றாராகலான், ஊழை யொக்கு மிக்க வலியுடையன வெவை யுள? இல்லை. இல்லை யென்பதை நூல்களாலே யன்றி அனுபவத்திலேயு மறிந்து, ஊழில்லாக் காரியத்தில் முயன்று சித்தி யடையாமல் வருந்துவதும் ஊழாலேயாம். ஒருவர்க்கு எளிதில் முடியத்தக்க காரியம் முடியாமையும், பெறவியலாத காரியம் பெறுவதும், நினையாத காரியம் தானே வலிய வருதலும் ஊழாலேயாம்.

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாது முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்." (ஔவை)

என்றதினால், ஈசனே யூழாகலான் ஈசனே நம்மாட்டு வாசமாயினும், ஊழை வெல்ல முடியாது. வைகுந்தவேளோன் பாண்டவர்க்குச் சுவாதீனனா யிருந்தும், அவர்கள் தம் ஊழின்படி துன்பத்தை யனுபவித்த பின்னரே இன்ப மெய்தினார்கள்.

அறிவுடையோர் தமது நுண்ணறிவினாலே பொருளீட்டவும் அறிவிலார் தமது மடமையினாலே பொருள் பெறா தேங்கவுமிருக்க, அறிவுடையார் வறியராகவும் அறிவிலார் செல்வராகவும் இருப்பது ஊழ் வலியேயாகும். செல்வம் பெறுதற்கும் பெருமைக்கும், அறிவுடைமையும் அறிவிலாமையும் காரணமன்று; ஊழே காரணமாம். இதனை,

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்ற செந்நாப் போதர் திருவாக்கானு மறியலாம்.

"பெருமுழங்கு திரைவரைக ணீந்திபிணி யுறினும்
திருமுயங்க லில்லையெனி லில்லைபொரு ளீட்டம்
ஒருமுழ மும் சேறலில ரேனும்பொரு ளூர்க்கே
வரும்வழி வினைபுழுந்து வாழ்க தவமாதோ" (சிந்தாமணி)

என்றதினல், அறிவுடையார் ஊழில்லாராயின் செல்வமடையாமை போல முயற்சியுடையாரும் ஊழில்லாராயின் செல்வமுடையராகார். அறிவும் முயற்சியும் இல்லார் ஊழுடையராயின், செல்வம் அவனூர்க்கு வழிகேட்டுத் தானே வந்து சேரும். செல்வம் அடைதற்கும் இழத்தற்கும், முயற்சியும் சோம்பலுமே காரண மென்பாராயின், அம்முயற்சியும் சோம்பலும் தாமே தோன்ரு; ஊழாலே தோன்று மென்க.

"நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு" என்ருர் நாயனர்.

செல்வம் பெறுதற்கும் பெருமைக்கும் ஊழ்வலியே முகாந்தர மாயது போல, பெற்ற செல்வத்தை இழத்தற்கும் இழவாமைக்கும் ஊழே முகாந்தரமாம் ஆகலான், பெற்ற பொருளை இழந்தோமே என்று வியசனிப்பதினாலும் பயனில்லை; ஊழன்றி தன்னிஷ்டப்படி பெற வியலாமையினல், பொருட் பேறுடையோ மென்று சந்தோஷித்தலு மாகா. பொரு ளிழவாதுடையவர் 'நம்மாட்டு காப்பாற்றுந் திறமை யிருக்கின்ற'தென்று செருக்கலும் ஆகா. செல்வம் நிலைத்தற்கும் நிலையாமைக்கும் ஊழ் காரணமேயன்றி, காப்பிழத்தலின லாகா.

"பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகாதம" என்ருர் பெருநாவலரும்.

ஊழாலே செல்வம் பெறினும், பெற்ற செல்வத்தைப் போதுடைத்தா யிருப்பினும், உண்பதற்கு ஊழ் வேண்டும். உண்ணு மூழில்லாதார் உண்ணுதலில்லை. பெருஞ் செல்வம் படைத்தவர், உலோப குணத்தாலேயாதல் மடைமையாலேயாதல் நோயாலேயாதல் அனுபவியாமையும், அனுபவிப்பினும் முற்றும் அனுபவியாமல் சிறிதனுபவித்தலையும், அதிக செல்வமிலாராயினும் முற்றும் நல்ல சுக மனுபவித்தலையும் பிரத்யக்ஷமாய் நாம் உலகில் காண்பதால், போகம் அனுபவித்தற்கும் அனுபவியாமைக்கும் ஊழே காரணமாம்.

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" என்ருர் முதற் பாவலரும்.

இதுகாறுங் கூறியவற்ருல் அறிவாற் பயனில்லை யென்பதாயிற்றே. அறிவாற் பயனில்லாது போமோ யெனின், போம். ஊழை வெல்ல அறிவா

லியலாது. அறிவுடையார் போகூழுடையராயின் செல்வத்தை யிழத்தலானும், அறிவிலார் ஆகூழுடையராயின் செல்வ மடைதலானும் அறிவாற் பயனில்லை யென்பது தேற்றம். ஒருவன் அறிவு கூர்மையாயினும் இழத்த லூழ் வந்தால் அவ்வறிவைக் கெடுத்தலானும், ஆகலூழ் வந்தால் அது அவ்வறிவைக் கூர்மை யாக்குதலானும் ஊழ் தீமையாக வந்த ஞான்று அறிவாற் பயனில்லை யென்பதே வெள்ளிடை விலங்கல்.

"பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்ற கடை" என்றார் தெய்வப் புலவர்.

ஆயின், கல்வி கற்று அறிவு பெற்றதின் பயன் என்னோ வெனின்: உள. நுண் பொருள்களை உணர்த்தும் நூல்கள் பல கற்ற மேலோர், தமக்குக் கிடைத்த வளவிலேயே "யதா லாப ஸந்துஷ்டா:" என்று ஸந்தோஷித்தலும், கற்றதற்கு ஏற்பன செய்யாது ஊழின்படி செய்வாராயின், அந்தோ! ஈதென்ன விபரீதம்!! எனப் பின் இரங்குதலுமே யாகும். ஆதலின், ஊழ், செயற்கையாலாகிய அறிவைக் கீழ்ப்படுத்தித் தானே மேலோங்கி நிற்கும்.

"நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்" என்றார் நான்முகனார்.

ஆனால், தீய ஊழ் அதிகப்பட்ட காலத்து அறிவாற் பயனுமுண்டு; அஃதியாதெனின்,

"நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்"

என்ற தேவர் வாக்கான் நல்வினையாலாகிய நன்மையைத் துடைக்க முயலாது மகிழ்ந்து அனுபவிப்பது போல, தீவினையாலாகிய தீமையைத் துடைக்க வீண் முயற்சியிலாவது மகிழ்ந்து அனுபவித்தலேயாம்.

இதுவரையினும், பெரும்பாலும் செல்வம்பற்றியே ஊழ் சொல்லப்பட்டதாயினும், ஒவ்வொன்றும் ஆதற்கும் ஆகாமைக்கும் ஊழே காரணமெனக் கொள்க. செல்வம் பெறுதற்காகுமூழ் கல்வி பெறுதற்காகா. கல்வி பெறுதற்காகு மூழ் செல்வம் பெறுதற்காகா. எவ்வூழ் எதைத்தர வந்ததோ அவ்வூழால் அதை மட்டுந்தான் பெறலாம், ஊழே வலியுடைத் தென்பது திருவள்ளுவர் கருத்தாயின்,

“ ஊழையு முப்பக்கங் காண்ப ருலேவின்றித்
தாழா துஞற்று பவர்”

என்றருளிய தென்னே யெனின், ஊழால் எத்துணைத் துன்பம் வரினும், ‘ முயற்சி விடற்பாலதன்று ’ என்பதை வற்புறுத்திக் கூறுதற்கே. ஆகலின், ஊழ் நம்மை யாட்டுகின்றது. நாம் அதன்படி ஆடுகின்ருேம். அதனிலும் சிறந்த வலியுடைய வேருெரு பொருளில்லே.

—— :o: ——

ஸ்ரீ:

# மோக்ஷம். †

[ஸ்ரீ. உப. நடாதூர் ஸௌம்ய நாராயணுசார்யர், அன்பில்.]

———

க்ருதயுக த்ரேதாயுக துவாபரயுகம் ஆகிய இம்மூன்று யுகங்களிலும் ரிஷிகள் தபஸ் செய்து அவரவர்களுக்கு ஜ்யோதீ ரூபமாயோ, அவயவத்துடனேயோ பகவானே ஸேவித்திருக்கிருர்கள். ரிஷிகள் அந்தந்த ஸமயம் நேர்ந்த பகவத் கடாக்ஷத்தால் ஸந்தோஷித்துக் கூட்டம் கூட்டமாய் ஒன்று சேர்ந்து வர்ணுச்ரம தர்மம் நடத்தவேண்டியதைத் தர்க்கம் செய்து ஸித்தாந்தம் செய்திருப்பதாய்த் தெரிகிறது. நிராலம்பந யோகமே இவர்களுக்கு அபீஷ்டமாக இருந்திருப்பதால் அதிலேயே அவர்கள் ப்ரவ்ருத்தித்து மறுபடி யோகம் தடுமாறிக் கஷ்டப்பட்டிருப்பதாயும் தெரிகிறது. ப்ரத்யக்ஷமான ஒரு அர்ச்சாரூபத்தில் ப்ரணவ மந்திரங்களே உருவேற்றி ஒரு பெரிய தடாகம்போல் வைத்துக் கொண்டிருப்பார் களேயானல் ச்ரமமில்லாமல் ஆலம்பநத்தோடு தியானம் செய்யலாம். அதில் தடுமாற்றத்துக்கு இடமில்லே. ச்வேத த்வீபவாஸிகள் ஆலம்பநத்தோடே தியானிப்பதால் ச்ரமத்துக்கு ஹேதுவில்லாமல் இப்பவும் ஸந்துஷ்டர்களாக இருக்கிருர்கள்.

“ கூருமெபதொ உஹாயொ,ம: ஸஷீஜொ யதுஸம்ஷ்டிதெ ।
உதஸ்ய வ்யாஹதெ ஸத்யக: யஜ்ஞதா: ஜாயதெ உநெ ॥
ஸவரஷ்வஷ்வ ஶக்தீநாம் ப்ரஹ்மணஸ்ஸ்உதஞரு ।
உமெதஉம ப்ரஹ்ம உஹாஹாம ஸவஉப்ரஹ்ம உயொஹஸி: ॥ ” [வி. பு.]

† இந்த லேகத்தில் சப்த தோஷங்களாவது அர்த்த தோஷங்களாவது ஏதாவது தென்பட்டால், அவைகளுக்கு தீபிகையின் பத்ராதிபர் ப்ரதிபூவாகார்.

[திவ்ய மங்கள விக்ரகத்தில், மனதானது கெடுக்கப்படாமல் இருக்கும்பொழுது ஆலம்பநத்தோடு கூடிய ஸபீஜமென்ற பெயருடைய எந்த யோகமானது நன்றாக யோகம் செய்கிறவர்களுக்கு உண்டாகிறதோ, ரிஷே! அந்தத் திவ்ய மங்கள விக்ரகமானது எல்லா சக்திகளுக்கும் மேலானதாகிய ப்ரஹ்ம ஸ்வரூபத்தி லிருக்கிறது. அடுத்ததாகிய மூர்த்தியோடு கூடிய பரப்ரஹ்மம், பாக்யசாலியே! விஷ்ணுவானர் ஸர்வ சக்தியுள்ள பரப்ரஹ்மத்தை அடையவேண்டுமானால் ஜீவகோடிகளிடம் கிருபைகூர்ந்து ரிஷிகளை வியாஜீகரித்து, அர்ச்சையாக அவதாரம் செய்திருக்கும் ப்ரம்மத்துக்கு அடுத்தபடியான அதாவது ப்ரம்மத்தைக் காட்டக்கூடிய அதாவது அந்த ஜ்யோதி ப்ரமாணம் இடைவிடாது த்வயாநுஸந்தானத்தினால் ப்ரகாசிக்கக்கூடிய ப்ரம்மத்தைப் பார்த்து ஆநந்தத்தை அடைகிறார்கள்.]

வைராக்ய நிதிகளான ரிஷிகள் எவ்வளவோ வருஷங்களாக யமநிய மாதிகளோடு தபஸ் செய்தார்கள். அதிலும் தவறிப் போனவர்களு முண்டு. அர்ச்சையில் ஈடுபட்டு த்யானித்துத் தவறிப்போனவனுக்குக் கீதாசார்யன் மறு ஜன்மத்திலாவது அவன் பூர்த்தி யடைகிறானென்று ப்ரதிஜ்ஞை செய்கிறான். ரிஷிகள் நிமித்தமாக பரம பதத்திலிருந்தும் க்ஷீராப்தியிலிருந்தும் ஸேவை ஸாதித்த ஜோதிஸ்ஸானது அந்தந்த இடங்களிலேயே இருந்து பக்தர்களை எதிர்பார்த்திருந்து அவர்களுக்கு நாம் இங்கு அவதாரம் செய்திருக்கிறோமென்று கிருபை கூரவும், உடனே அவர்கள் அந்த இடத்திலுள்ள காட்டை அழித்து ஸந்நிதி கட்டி வைத்ததாய்த் தெரிகிறது. கால க்ரமேண ராஜாக்கள் காலம் முதல் நாளது வரையில் அர்ச்சையில் ஈடுபடுகிறவர்களுக்கு அவ்வர்ச்சா ரூபியான பகவான் தமது செய்கையால் காண்பிக்கிறார். இது தெரிந்தவர்களுக்கு எல்லாம் ஸம்மதமான விஷயம். அவதாராதிகளுக்கும் அர்ச்சைக்கும் என்ன வாசி என்றால்: அவதாரம் பிரவாகம் வந்து வடிந்து போகிற நீர் நிலை போன்றது. அர்ச்சை, பூர்ணாம்சத்துடன் தடாகம்போல் வற்றாததாக இருப்பதால் ஸம்ஸார பயமாகிற தாபத்தைப் போக்குவிக்கும் ஒரு வற்றா ஸமுத்ரமா யிருக்கிறது.

ஒரு ஸமயம் கிருஷ்ணபகவான் துவாரகையில் எழுந்தருளி யிருக்கும் போது ரிஷிக் கூட்டங்கள் அவரைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது பகவான் அவர்களைப் பார்த்து, "ரிஷிகளே! எங்களைப் போன்றவர்கள் பஞ்ச லோஹ பிரதிமையில் ஆவிர்ப்பவித்திருக்கிற பிரம்மத்தை ஆராதிக்கிறார்கள். நீங்கள் மாநஸிகமாகப் பகவானைத் தியானம் செய்து சந்துஷ்டி யடைகிறீர்கள்" என்று உபசாரமாகச் சொன்னார். இவ்வார்த்தைகளைக் கேட்ட

சிலர் இதுவே கைம்முதலாய் அர்ச்சையினிடத்தில் விசேஷ கௌரவம் வைக்காமல் அர்ச்சா விக்ரஹத்தை அடிக்கடி சேவிக்கவும் வாராமல் இருந்தனர். அதனால் அவர்களுக்கு எடுத்த ஜப தபாதிகளும் நிலைப்பதாக தெரியவில்லை. அர்ச்சையி னிடத்தில் பற்றுத லுள்ளவர்களுக்கு இருக்கிற வைராக்யம் அவர்களுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. ஆகையால், பகவான் அர்ச்சை இன்னதென்பதைக் காட்டுவதற்காகத் தன் அம்சமான பரிவாரங்கள் ஆயுதங்கள் இவர்களை ஆழ்வார் ஆசார்யர்களாக அவதரிப்பித்தான். காரியம் கைக்கொள்பவனுக்குத் தூதன் எஜமானனைக்காட்டிலும் கிருபையுள்ளவனாக இருந்தாலொழிய காரியம் கைக்கூடாது என்று தன் ஸ்வரூபத்தைத் தெரிவிக்க அங்கிருந்த பேர்வழிகளைக் கொண்டு வந்தான் என்றபடி. ஜீவ கோடிகளுக்கு ப்ராகிருதத்துக்கும் அப்ராக்ருதத்துக்கும் இருக்கிற வாசியைக் காட்டி பலத்தைப் பகவானிடம் சேர்க்கைக்கன்றோ ஈச்வரன் இப்படிச் செய்தான்?

கர்நாடக ராஜாக்கள் பெருமாளிட மிருந்த பக்தியினால் அனேக கிராமங்களை ஆராதனத்துக்கும், தொழிலாளிகளுக்கும், கைங்கர்ய பரர்களுக்கும் விட்டுச் செப்புப் பட்டத்திலும் கல்லிலும் அடித்துத் தாங்கள் செய்த தர்மம் அழியாம லிருக்கவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். ரிஷிகளும் அந்தந்த விடத்தில் ஸேவை ஸாதித்த குறிப்பைக்கொண்டு சதுர்யுகக் கணக்குச் சொல்லி யிருக்கிறார்கள். உலகம் யுகந்தோறும் அழிவதும் மறுபடி பிறப்பதுமா யிருக்கிறது. மஹாப் பிரளயத்தில் எல்லாவற்றுக்கும் அழிவுண்டு. யுகப்ரளயத்தில் ஸ்தாவரங்கள் அழிவதில்லை. த்ரேதாயுகத்தில் ராமாவதாரம் த்வாபரயுகத்தில் கிருஷ்ணாவதாரம். அப்போது ஏற்பட்ட அயோத்தி மதுரை என்னும் நகரங்கள் இன்றும் இருந்துவருகின்றது. அடிக்கடி ஜீர்ணோத்தாரணம் அந்தந்த அரசர்களால் நடந்து வந்திருக்கிறது. மஹா சக்தியுள்ள ரிஷிகள் நிராலம்பனமாய் ரேசக பூரக யமநியமாதிகளுடன், அக்னி மத்தியிலும் தண்ணீரிலும் சருகு வாயு இவைகளைப் புஜித்துக் கொண்டும் கணக்கில்லாத வருஷங்கள் தபஸ் செய்து அந்த ஸமயம் மட்டும் சிலர்க்கு ஸேவை ஸாதித்து ஸந்துஷ்டி யடைந்திருக்கிறார்கள். சிலர் ராமாவதாரம் கிருஷ்ணாவதாரம் வரப்போகிறது என்றும், அப்போது கர்ம சக்ஷுஸ்ஸாலேயே பகவானை ஸேவிக்கலா மென்றும் எதிர்பார்த்திருந்தார்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

# பதினேழாவது வர்ஷத்திய அறிக்கை.

---

சென்னை, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் நிர்வாஹ கமிட்டியாரால், ஸ்ரீ மதுராந்தகத்தில் நடைபெற விருக்கும் மஹா ஸங்கத்தில் ஸப்யர்களுடைய அங்கீகாரத்திற்காகப் பின்வரும் அறிக்கை நிர்த்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஸபை:—ஸப்யர்களின் ஸங்க்யை ப்ரஸ்தாப வர்ஷத்தில் அதிகரித்திருப்பது ஸந்தோஷிக்கத் தக்கது. பதினாறுவது வருஷத்திய அறிக்கையின்படி அந்த வர்ஷம் முடிவில் சந்தாதாரர்களின் தொகை 660; கௌரவ மெம்பர்கள் உள்பட மொத்தம் 668. ப்ரஸ்தாப வர்ஷத்தில் சந்தாதாரர்களின் தொகை 775. அத்துடன் நிர்வாஹ கமிட்டியார், கௌரவ மெம்பர்களின் தொகையை 38 ஆக அதிகரித்துப் பல மடாதிபதிகளுக்கும் வித்வான்களுக்கும் ஸம்ஸ்க்ருத பாடசாலைகளுக்கும் தீபிகையை இனமாக அனுப்பத் தீர்மானித்தனர்.

பதினெட்டாவது வர்ஷத்தில் பிப்ரவரிமீ 29உக்குள் ஸப்யர்களின் தொகை இன்னும் அதிகரித்திருக்கிறது; அந்தத் தேதியில் மொத்தம் அங்கத்தினரின் தொகை 786.

வேதாந்த தீபிகை:—ப்ரஸ்தாப வர்ஷ ஆரம்பத்தில் ஏற்கெனவே பத்ராதிபராக இருந்த ஸ்ரீ. உ. வே. ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் ஸ்வாமி ராஜிநாமா செய்துவிட்டார். நிர்வாஹ கமிட்டியார் அவருடைய ராஜிநாமாவை அங்கீகரித்து ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியைப் பத்ராதிபராக இருக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அந்த ஸ்வாமி அதை அங்கீகரித்துத் தீபிகையை நடத்திவருகிறார். பல வ்யாஸங்கள் வெளியிடப்படுவதுடன், ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்ததும் இதுவரையில் துர்லபமாக இருந்ததுமான ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹமென்ற அபூர்வ க்ரந்தம் இவ்வர்ஷம் முதல் க்ரமேண தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிடப்பட்டு வருகிறது. அதேமாதிரி துர்லபமாக இருந்த ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரம் ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யாநத்துடன் ப்ரசுரிக்கப்பட்டு பூர்த்தியுமடைந்து விட்டது.

தீபிகைக்கு அநந்ய ப்ரயோஜநமாக விஷய ப்ரதாநம் செய்தும் அபிமாநத்துடன் த்ரவ்ய ஸஹாயம் செய்துமுள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தினருக்குக் கமிட்டியார் தங்களுடைய ஹார்த்தமான க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

நிர்வாஹகர்கள்:—ப்ரஸ்தாப வர்ஷத்தில் நிர்வாஹகர்களில் சிறிது மாறுதல்கள் நேர்ந்தன. வர்ஷ ஆரம்பம் வரையில் கூட்டுக் காரியதரிசியாகவிருந்த ஸ்ரீ. உ. வே. ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் ஸ்வாமி தமது வேலையை ராஜிநாமா செய்துவிட்டார். மே மாதம் வார்ஷிகமஹா ஸங்கம் நடந்தவரையில் மற்றொரு கார்யதர்சியான ஸ்ரீ. உ. வே. எஸ். கோபால

ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும் உதவி கார்யதரிசியாக விருக்க ஸ்ரீ. உ. வே. கே. டி. ஸுந்தரராஜசார்யர் ஸ்வாமியும் கார்யங்களை நிர்வஹித்து வந்தனர். வார்ஷிக மஹா ஸங்கத்தில் ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும் ஸ்ரீ. உ. வே. எஸ். லக்ஷ்மீ நரஸிம்மாசார்ய ஸ்வாமியும் கார்ய தர்சிகளாக நியமிக்கப்பட்டனர். ஸபை நிர்வாஹத்துக்கு ஒரு உதவி காரிய தர்சி அநாவச்ய மென்பதாக அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நிர்வாஹ கமிட்டி:—வர்ஷ ஆரம்பத்தில் கமிட்டி அங்கத்தினர்கள் இருவர் ராஜீநாமா செய்தனர். அவர்களுக்குப் பதிலாக இருவர் கமிட்டி யாராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸபையின் கார்யங்களை ஆலோசனை செய்து முடிவு செய்யக் கமிட்டியார் பத்துமுறைகள் கூடியிருக்கின்றனர்.

வார்ஷிக மஹா ஸங்க கார்யக் கூட்டத் தீர்மானத்தை அநுஸரித்து, கமிட்டி அங்கத்தினரான ஸ்ரீ. உ. வே. கே. வி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி மாதாந்த கணக்குப் பரிசோதகராக நியமிக்கப்பட்டு, அந்த ஸ்வாமியும் கணக்குகளைப் பரிசீலனை செய்து தகுந்த ஸஹாயம் செய்தார்.

உபந்யாஸங்கள்:—கோயம்புத்தூர் ஸ்ரீ. உ. வே. வி வி. வெங்கட ரமணய்யங்கார் ஸ்வாமி ஸபைக்கு உபகரித்த த்ரவ்யத்தைக் கொண்டு (ரூபாய் நூறு) கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களில் பல விடங்களில் ஸ்ரீ. உ. வே. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியைக் கொண்டு ஸம்ப்ரதாய விஷயமாக உபந்யாஸங்கள் செய்ய ஏற்பாடு செய்யப் பட்டது. அந்த ஸ்வாமி கமிட்டியார் அபிப்ராயப்பட்டதை விட அதிகப்படி யாகவே பல உபந்யாஸங்கள் செய்து உபகரித்ததற்காகக் கமிட்டியார் தங் கள் க்ருதஜ்ஞதையை அந்த ஸ்வாமிக்குத் தெரிவிக்கின்றனர். அந்த உபந் யாஸங்களின் விவரம் 18-வது ஸம்புடம் 3, 4, 5 ஸஞ்சிகைகளில் ப்ரசுரிக்கப் பட்டிருக்கிறது.

ஸ்ரீ. உ. வே. வித்வான் கொடவாசல் நரஸிம்மாசார்யஸ்வாமி கமிட்டி யின் ப்ரார்த்தனையின் பேரில் அநந்ய ப்ரயோஜநமாகச் சென்னை, செங்கல்பட்டு முதலிய ஜில்லாக்களில் ஸபை ஸம்பந்தமாக உபந்யாஸங்களைச் செய்யத் திரு வுள்ளம்பற்றிச் சென்னை, திண்ணூர், மதுராந்தகம், நெல்லூர் முதலிய பல விடங்களிலும் பல உபந்யாஸங்கள் செய்து ஆதரவளித்ததற்காகக் கமிட்டியார் தமது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

தஞ்சை ஜில்லாவில் உபந்யாஸங்களை உத்தேசித்து பல வர்ஷங்களாக வர்ஷம் 1-க்கு ரூ. 200 கொடுத்து உதவிசெய்துவந்த ஸ்ரீ உ.வே. டில்லி ஸ்ரீநி வாஸய்யங்கார் ஸ்வாமி அந்த உபகாரத்தை நிறுத்த நேர்ந்தது. மீண்டும் அதைக் கொடுக்கவேண்டுமென்று அந்த ஸ்வாமியை ப்ரார்த்தித்தும் இன்னும் அது ஸபைக்கு ப்ராப்தமாகவில்லை.

ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸம்மாநம்:— ஸ்ரீ. உ. வே. திட்டை ராவ் ஸாஹிப் டி. எஸ் ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமியின் த்ரவ்ய ஸஹாயத்தைக் கொண்டு ப்ரதி வர்ஷம் விநியோகிக்கப் படும் இந்த ஸம்மாநம் இந்த வர்ஷத்தில் "ஸ்ரீ பாஷ்யகாரரும் ஸ்ரீ கண்டா சார்யரும்" என்னும் விஷயமான வ்யாஸத்திற்குப் பாரிதோஷிகமாகக் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது ஸம்பந்தமான வ்யா ஸங்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றன.

வார்ஷிக மஹா ஸங்கம்.—ஸபையின் 16-வது வார்ஷிக மஹா ஸங்கம் ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில் 1927-ம் வருஷம் மேமீ 12, 13, 14-ம் தேதிகளில் வெகு விமர்சையாக நடைபெற்றது. வித்வான்களான ஸ்ரீ உபய. வே. குரிச்சி சேஷாத்ரியாசார்ய ஸ்வாமி ஸ்ரீ உபய. வே. காரப்பங்காடு சிங்கப் பெருமாள் ஸ்வாமி, ஸ்ரீ உபய. வே. கடாம்பி ராமாநுஜா சார்யஸ்வாமி, ஆகிய இவர்கள் முறையே ஒவ்வொரு தினமும் அக்ராஸநம் வஹித்து மஹா ஸங்கத்தை நடத்தினர்கள். பல பாகங்களிலிருந்தும் ஏராளமான ஸ்வாமிகள் எழுந்தருளி யிருந்து அலங்கரித்தனர். பல வித்வான்களைக் கொண்டு அரிய உபந்யாஸங்கள் செய்விக்கப்பட்டன. ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கர் (ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்), ஸங்கத்துக்கு ரூ. 200 த்ரவ்ய ஸஹாயம் செய்து அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றினர். திருக்குடந்தை ஸ்ரீ. உபய. வே. சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீ. உபய. வே. கும்மட்டித்திடல் ஜீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும் விசேஷ ச்ரத்தையுடன் எல்லோரும் ஸந்தோஷிக்குமாறு ஸபையை நிர்வஹித்து உபகரித்தனர்.

கணக்குப் பரிசோதனை:—இந்த வர்ஷத்தின் கணக்குகளைப் பரிசோதிக்க ஸ்ரீ உ. வே. டி. நரஸிம்ம ராகவய்யங்கார் ஸ்வாமியை (Supdt, Accountant Generals' Office) கமிட்டியார் கேட்டுக்கொண்டதற் கிணங்க, அந்த ஸ்வாமி கணக்குகளைப் பரிசோதித்து, தமது அறிக்கையையும் அனுப்பி யிருக்கிறார். அதன் ஸங்க்ரஹம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வாமிக்குக் கமிட்டியார் தங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

வரவு சேலவு கணக்கு.

| | | |
|---|---|---|
| * 16-வது வர்ஷத்திய முடிவில் இருப்பு | ... | 1685—6—10 |
| 17-வது வர்ஷத்திய வரவு | ... | 1840—7—6 |
| ஆக | | 3525—14—4 |
| ,, செலவு | | 2128—15—1 |
| 17-வது வருஷத்திய முடிவில் இருப்பு | ... | 1396—15—3 |

ஸபையின் சந்தாவை ஸப்பர்களில் சிலர் தக்க காலத்தில் அனுப்பாத காரணத்தினால் ஸுமார் 800-ரூபாய் வரையில் பாக்கி ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் பாக்கி வைத்திருக்கும் ஸப்யர்கள் க்ருபையுடன் சந்தா பாக்கியைச் சீக்ரத்தில் செலுத்தத் திருவுள்ளம்பற்றும் பக்ஷத்தில் ஸபையின் வரவு அதிகரித்து அதற்கு மிகுந்த ஆநுகூல்யம் ஏற்படும். ஸபைக்குப் போதுமான அர்த்த ஸௌகர்யமில்லாததால், ஸம்ப்ரதாய ப்ரவசநவிஷயத்தில் ஸபை இன்னும் தீவ்ரமான ப்ரயத்நங்கள் செய்யக்கூடாமலிருக்கிறது.

இந்த ஸபையின் அபிவ்ருத்தியிலும் தீபிகையின் அபிவ்ருத்தியிலும் ச்ரத்தாளுக்களாய் அநேகவிதமாய் உபகரித்த எல்லா ஸ்வாமிகளுக்கும் கமிட்டியார் தங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவிப்பதுடன், பேன் மேலும் அவர்

குறிப்பு:—16-வது வர்ஷத்திய இருப்பிலிருந்து 172-7-6 பிற்பாடு ஸ்ரீ. உ. வெ டில்லி ஸ்வாமிக்கு மாஜி கார்யதர்சியால் திரும்ப அனுப்பப்பட்டு விட்டது,

கள் இவற்றை விசேஷமாக ஆதரித்து இம்முக்ய கைங்கர்யம் நன்கு நிறைவேறும்படி செய்ய வேணுமென்று பிரார்த்திக்கின்றனர்.

மதராஸ்.
1—4—28.

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்,
எஸ். லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியர்,
காரியதர்சிகள்.

## கணக்குப் பரிசோதகரின் அறிக்கை.

ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் கார்யதர்சிகளுக்கு:—

ஸபையின் எக்ஸிக்யுடிவ் போர்ட் கமிட்டியார் நியமனப்படி, 1927-ம் வர்ஷம் செப்டம்பர்மீ 30உ யோடு முடிவான ஸபையின் 17-வது வர்ஷத்திய கணக்குகளைப் பரிசோதித்தேன். வரவு செலவு கணக்குகள் ஸரியாக வைக்கப்பட்டிருக்கும் விஷயத்தில் திருப்தியடைந்தேன். மாஸாந்தர வரவு செலவு கணக்குகளும் ஸரியாக வைக்கப்பட்டிருக்கின்றன. மாஸாந்தர வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை (Check) செய்ததில் ஸரியாக வைக்கப்பட்டதாக ஏற்பட்டது.

திருவல்லிக்கேணி
31—3—28.

டி. நரஸிம்மராகவாசாரியர்,

வரவு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| முன் இருப்பு | 1685 | 6 | 10 |
| சந்தா | 1620 | 9 | 0 |
| புஸ்தக விற்பனை | 21 | 4 | 6 |
| வட்டி வரவு | 15 | 10 | 0 |
| விளம்பரம் | 68 | 0 | 0 |
| உபந்யாஸங்களுக்கு நன்கொடை | 115 | 0 | 0 |
| மொத்தம் | 3525 | 14 | 4 |

செலவு.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| அச்சுக்கூலியும் காகிதமும் | 1296 | 6 | 3 |
| தபால் சார்ஜ் | 287 | 2 | 5 |
| குமாஸ்தா சம்பளம் வகைரா | 131 | 1 | 0 |
| வித்வான்களுக்கு ஸம்மானம் | 30 | 0 | 0 |
| ப்ரூப் பரிசோதகருக்கு | 50 | 0 | 0 |
| கணக்குப் புஸ்தகங்கள் அச்சிட்டது | 22 | 8 | 0 |
| பைண்டிங் செலவு | 12 | 8 | 0 |
| ப்ளாக் தயாரித்தது | 13 | 12 | 0 |
| வண்டிச்சத்தம், கூலி வகைரா | 34 | 14 | 9 |
| உபந்யாஸங்கள் ஸம்பந்தமான பிரயாணச் செலவு | 25 | 0 | 0 |
| ஸ்டேஷனரி செலவும் மற்றும் சில்லரைச் செலவுகளும் | 33 | 3 | 2 |
| ஸ்ரீ டில்லி ஸ்ரீநிவாஸய்யங்காருக்கு அவருடைய உபந்யாஸ பண்டு பணத்தைத் திருப்பியனுப்பினது | 172 | 7 | 6 |
| ஆக செலவு | 2108 | 15 | 1 |
| வருஷ முடிவில் கையிருப்பு | 1416 | 15 | 3 |
| மொத்தம் | 3525 | 14 | 4 |

ஸ்ரீ:

# கடிதங்கள்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

## தத்வ போதிநீ.

சென்ற மாசி மாஸத்திய வேதாந்த தீபிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிற ஸம்சயோச்சேதிநியை அடியேன் கண்ணுற்றேன். அது ஸம்சய பரம்பரையை உத்தரோத்தரம் விருத்தி அடையச்செய்கிறதே ஒழிய உச்சேதநம் செய்யும் தன்மை அதற்கு இல்லை.

தொடக்கத்தில், '𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑌂' என்கிற பதத்திற்கு விக்ரஹ வாக்யம் எழுதினது ஸரியன்று என்பது அடியேனுடைய ஆக்ஷேபம். அந்த ஸ்வாமி இதரேதர யோக த்வந்த்வ ஸமாஸத்தை ஆச்ரயித்திருக்கிறார். அடியேன் கர்மதாரய ஸமாஸத்தை ஆச்ரயித்தவன். இந்த இடத்தில் இந்த ஸமாஸம் எல்லா ஸித்தாந்திகளாலும் ஆதரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சங்கராசார்யர் இந்தக் கர்மதாரயத்தைக் கண்டரவேண சொல்லியிருப்பதுடன், அப்பய்ய தீக்ஷிதரும் தாம் செய்திருக்கிற ஸித்தாந்த லேச ஸங்க்ரஹ க்ரந்தத்திலிதை ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். அதற்கு விவரணமான க்ருஷ்ணாலங்கார வ்யாக்யாநத்தில் அச்யுத க்ருஷ்ணாநந்த தீர்த்தரும் இவ்விதம் எழுதி இருக்கிறார். அதாவது:—"𑌇𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌏𑌕𑌸𑍍𑌯𑍈𑌵 𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌲𑌕𑍍𑌷𑌯𑌤𑌿—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌶𑌙𑍍𑌕𑌾𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑌣𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑌤𑌿, 𑌨 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌃 । 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌞𑍍𑌚 𑌤𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌞𑍍𑌚 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌂, 𑌕𑌰𑍍𑌮𑌧𑌾𑌰𑌯𑌃; 𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌚 𑌤𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌂 𑌚 𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌮𑍍, 𑌇𑌤𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮𑌧𑌾𑌰𑌯𑌃 । 𑌉𑌭𑌯𑌕𑌰𑍍𑌮𑌧𑌾𑌰𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍇𑌵 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌯𑍋𑌰𑌭𑍇𑌦𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌽𑌪𑌿 𑌪𑍁𑌨𑌰𑌭𑌿𑌨𑍍𑌨𑌪𑌦𑌂 𑌕𑌰𑍍𑌮𑌧𑌾𑌰𑌯𑌾𑌵𑌗𑌤𑌾𑌭𑍇𑌦𑌃 𑌐𑌕𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣 𑌏𑌵, 𑌨 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌾𑌦𑍌 𑌗𑍁𑌣𑌗𑍁𑌣𑌿𑌨𑍋𑌰𑌿𑌵 𑌤𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍇𑌵 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌾𑌯𑍇𑌤𑌿 𑌬𑍋𑌧𑍍𑌯𑌮𑍍." ஜகத்ரூபமான கார்யத்தைக் குறித்து ப்ரஹ்மமானது உபாதாந காரணமாகவும் நிமித்த காரணமாகவு மிருக்கிறதென்பது ஸித்தாந்தம். ப்ரஹ்மத்திற்கு ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்ட வேஷேண ஜகதுபாதாநத்வமும், ஸங்கல்ப விசிஷ்ட வேஷேண நிமித்தத்வமும், காலாத்யந்தர்யாமி வேஷேண ஸஹகாரி காரணத்வமும் கண்டோக்தமாக இருக்கிற இந்தக் கர்மதாரயத்தை த்யாகம் பண்ணி, த்வந்த்வத்தை அந்த ஸ்வாமி ஆச்ரயித்ததற்கு யாது காரணமென்பது விளங்கவில்லை. 'ப்ரஹ்மண அபிந்ந நிமித்தோபாதாநத்வம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பதால்' என்று எழுதி இருக்கிறார். விஷயத்திற்கு இந்தப் பெயர் யார் இட்டனர்? இவரே இட்ட பெயர் தானே. 'ப்ரஹ்மண:' என்கிற பதத்தைக் கூட ப்ரயோகம் பண்ணினதாலேயே அபிந்ந பதத்தைக் கார்யபரமாக எண்ணி அர்த்தமெழுதி விடலாமா? அடியேனுடைய பக்ஷம் த்வந்த்வாதீதம்; அல்லது அத்வந்த்வம். இந்தக் கர்மதாரய ஸமாஸ பக்ஷமே அப்யர்ஹிதம். இந்தப் பக்ஷத்திலே தான் எல்லா வேதாந்திகளுக்கும் நோக்கு. 'ப்ரஹ்மண:' என்கிற பதம் இந்தப் பக்ஷத்தில் நன்கு அந்வயிக்கிறது. ப்ரஹ்ம பதத்துக்குப்

பிந்தி இருக்கிற ஷஷ்டி விபக்தியானது ஸம்பந்த ஸாமாந்யமானது; ஆதாராதேய ரூப மான ஸம்பந்த விசேஷத்தில் பர்யவஸிக்கிறது. ஆகையால் அதற்கு, ப்ரஹ்மத்தினிடத்தி லுள்ள அபிந்ந நிமித்தோபாதாநத்வ மென்று ஸ்வரஸமாக அர்த்தம். அந்த ஸ்வாமி, "அடியேன் எழுதியபடி அபிந்நபதத்தைக் கார்யபரமாக வைத்து விக்ரஹம் பண்ணினால் தான், பதங்களுக்கு ஸார்த்தக்யம் ஏற்படுவதுடன், லக்ஷ்யமாணார்த்த இதர மத வ்யாவ்ருத்தியும் ஸ்வமத ஸாரஸ்ய ஸூசநமும் ஏற்படும்; 'ப்ரஹ்மண: நிமித்தோபாதாநத்வம்' என்றாலே ப்ரஹ்ம நிஷ்டமான த்விவித காரணத்வம் ஏற்பட்டு விடுமாகையால், அபிந்நபதமோ அபிந்நபதத்தைக் காரண பரமாக ஆக்கினால் ப்ரஹ்மண: என்கிற பதமோ வ்யர்த்தமாக ஆகும். அதைக் கார்யபரமாக வைத்தால் வைசேஷிகாதி மத வ்யாவ்ருத்தி ஏற்படும். அவர்கள் ப்ரஹ்ம நிஷ்ட ஸம்யோக ரூப அபிந்ந கார்யத்தைக் குறித்து ப்ரஹ்மண: நிமித்தோபாதாநத்வம் ஒப்புக்கொண்டாலும் 'அபிந்ந கார்யத்தை' என்பதற்கு 'அபிந்நதர்மாவச்சிந்ந கார்யத்தை' என்று அர்த்தம் கொள்ளலாமாகையால் தாத்ருச கார்யம் ப்ரதி நிமித்தோபதாநத்வம் அவர்கள் ஒப்பவில்லையாதலால் தன்மத வ்யாவ்ருத்தி ஏற்படும். ஆகையால் கார்ய பரமாக வைத்து விக்ரஹவாக்யம் எழுதப்பட்டது" என்று எழுதி இருக்கிறார். அதற்கு உத்தரம்:- அந்த ஸ்வாமி வாக்யமெல்லாம் ஒருவித அபிநிவேசத்தை வெளியிடுகின்றது. 'ஏக' என்கிற பதம் ஸ்வரஸமாக ப்ரயோகிக்கத்தக்கதாக இருக்க, அதைவிட்டு 'அபிந்ந' என்கிற பத ப்ரயோகத்தின் கருத்தென்ன? அதைக் கார்யபரமாக ஆக்கினால் அபிந்ந பத ஸ்வாரஸ்யம் ககந குஸுமமே. காரணபரமாக வைத்தால் இந்தப் பதம் புஷ்கலமான அர்த்த ஸ்வாரஸ்யத்தை ப்ரகாசப்படுத்துகிறது. அப்பொழுது தான் அதற்கு ஸார்த்தக்யம் வருகிறது. அந்த ஸ்வாமி விக்ரஹ வாக்யம் எழுதின மாதிரி பூர்வாசார்யர்கள் ஒருவரும் எழுதவில்லையே. 'லக்ஷ்யமாணார்த்த' என்பது இதர மத விசேஷணமா? ஸ்வமத விசேஷணமா? கூடமாகப் போடப்பட்டிருக்கிறது. அடியேன் பக்ஷத்தில் 'ப்ரஹ்மண:' 'அபிந்ந' இவ்விரண்டு பதங்களுக்கும் வையர்த்ய லேசமில்லை. வைசேஷிக மத வ்யாவ்ருத்தி ஏற்படுமென்கிறார். அதுவும் பொருந்தவில்லை. ப்ரஹ்ம நிஷ்ட ஸம்யோகம் ப்ரஹ்ம கூட ஸம்யோக மென்று வைத்துக்கொள்வோம். அதைக் குறித்து ப்ரஹ்மத்துக்கு நிமித்தத்வம் உபாதாநத்வம் இரண்டும் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்; அபிந்ந தர்மாவச்சிந்ந கார்யத்தைக் குறித்தும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவ்வாறு இருக்க வ்யாவ்ருத்தி எப்படி? அபிந்ந பதம் ஏக பர்யாயமாக இருப்பதில் அடியேனுக்கு ஆக்ஷேபணையே இல்லையே.

(2) இணங்கின அர்த்தம் பஞ்சமிக்கு அபாதாநத்வமே. தர்ம தர்மிஜ்ஞாநம் அடியேனுக்கு உண்டு. இந்த ஸம்சயத்தை ஒருவரும் தீர்க்கவேண்டாம். உபாதாநத்திற்கும் அபாதாந ஸம்ஜ்ஞை விதிக்கவே இல்லை. 'யதோவா இமாநி' என்கிற இடத்தில் பஞ்சமியானது ஹேத்வர்த்தத்தில் என்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். 'பஞ்சம்யந்த பதத்தினால் வாச்யமான' என்கிற இடத்தில், 'வஞ்சமீ சுஜெ யவஷ்ரீ தகீவஷம் வஞ்சஷேூ' (பிற்காலத்தில் பஞ்சமி எந்தப் பதத்தின் மீது வருமோ அந்தப் பதம்) என்பது அர்த்தம். அதனால், 'பஞ்சம் யந்தத்துக்கு மேல் பஞ்சமீ வருகிறது என்றல்லவோ அர்த்தம் ஏற்படுகிறது? இது ஸரியா?' என்கிற சோத்யம் நிரவிக்கப்பட்டது.

(3) யோக விபாகம் இஷ்டஸித்யர்த்தம் தான், வேறு காரணத்தைக் கருதி யோக விபாகம் கிடையாது. ஸித்தாந்த கௌமுதீ க்ரந்தத்தில் அவ்யயீ பாவ ஸமாஸ ப்ரகரணத்தில் ஸ்ரீபட்டோஜி தீக்ஷிதர் 'யொமவிஹாமவஷீ ஊஷ வீஜஷ்ய- ஜவாக கதிவயதிஜஷொதூஙவஷொயம் ஸஊஸஃ' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லி யிருக்கிறார். இது, ஷெவரும் ஸஹு களஷூஹம் வரளஜஉதொ ஙஊ தகவெவொயிநீ வாஞஉதொஙஊ உஜஷேஷா முதலிய க்ரந்தங்களில் ஸுஸ்பஷ்டமாக இருக்கிறது. இந்த விஷயத்தில் சர்ச்சையே வேண்டாம்.

திருச்சி,
6—4—28

த. வே. ஸ்ரீநிவாஸ:

# புஸ்தக விமர்சம்.

## (1) ஸ்ரீ பகவத் த்யாந ஸோபாந ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரங்களின் வ்யாக்யை.

ஸ்ரீ: உப. அன்பில். வெ. கோபாலாசார்யர் என்று ப்ரஸித்தரான வித்வாந், ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுல் அநுக்ருஹீதங்களாயுள்ள பகவத் ஸ்தோத்ரங்களுக்கு ஸம்ஸ்க்ருத பாஷையில் பாவ விவரணம் செய்வதாக உபக்ரமித்து, இப்பொழுது ஸ்ரீ பகவத் த்யாந ஸோபாநம் ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம் ஆக இந்த இரண்டு ஸ்தோத்ரங்களுக்கும் பாவ விவரணத்தைப் பூர்ணமாக எழுதி அதை மூல ச்லோகங்களுடன் நாகர லிபியில் அச்சுப் பதிப்பித்து ப்ரசுரம் செய்திருக்கிறார். அந்த வ்யாக்யாநம் முழுவதையும் நாம் படித்துப் பார்த்தோம். ஸகல அம்சங்களிலும், அது, ரஸிகரெல்லாருக்கும் மிக்க ஆநந்தத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதில் ஆக்ஷேபமில்லை. வ்யங்க்யார்த்தங்களை விவரிப்பதிலும், பத ப்ரயோகங்களுடைய ஸ்வாரஸ்ய பலத்தால் ப்ரத்யபிஜ்ஞாபிதமாயுள்ள பூர்வர்களுடைய திவ்ய ஸூக்திகளைச் சரியானபடி கண்டு பிடித்து எழுதுவதிலும் ஸ்ரீ கோபாலாசார்யருடைய வ்யாக்யை ரஸவத்தாகவும் அந்யாத்ருசமாகவும் இருக்கிறது. ஸ்ரீ நிகமாந்தார்யனுடைய ஸ்தோத்ரங்களெல்லாம் வேதாந்தார்த்தங்களைப் பஹுவாக அடக்கியுள்ளவை. அம்மாதிரியான வேதாந்தார்த்தங்களை எவ்வித லோபமுமின்றிக்கு ஸ்ரீ கோபாலாசார்யர் மிக்க உத்ஸாஹத்துடன் விவரிக்கிறார். சிலவிடங்களில் அந்த விவரணம் அதிரிக்தமாக இருந்தபோதிலும், வேதாந்தார்த்த விசாரத்தில் அவருக்கு இருக்கும் உத்ஸாஹ ஸம்பத்தை நன்கு அறிந்திருக்கும் நாம் அந்த அதிக்ரமத்தைப் பெரியதொரு தோஷமாக க்ரஹிக்கமாட்டோம். தவிரவும், ப்ராப்த விஷயத்தில் ஏற்படும் விசாரத்திற்கு அதிரேக ப்ரயுக்தமான தோஷம் என்பது எப்படி ஸம்பாவிதமாகும்? வ்யாக்யாநம் எழுதப்பட்டிருக்கும் வாக்ய சைலியும் அதிஸரளமாகவும் ப்ரஸந்நமாகவும் மதுரமாகவும் கம்பீரமாகவும் இருக்கின்றது. இப்படி ஸஹ்ருதயரெல்லாருக்கும் அதிமாத்ரம் ஆஸ்வாதநீயமான ரஸத்துடன் கூடிய தாத்பர்ய விவரணங்களைச் செய்ய உத்யுக்தராக இருக்கும் இவருடைய ப்ரவ்ருத்தியைப் பகவாந் கடாக்ஷித்து நிர்விக்நமாகத் தலைக்கட்டி வைக்கவேணுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

## (2) திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் பெருமை.

இது, திருக்குடந்தை திருப்புறம்பயத்தில் இருக்கும் ம-ா-ா-ஸ்ரீ டி. டி. ராமஸ்வாமி நாயுடு அவர்களால் எழுதப்பெற்று, ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதை அபேக்ஷிப்பவர்கள் ஷை ராமஸ்வாமி நாயுடு அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதினெட்டாவது

# வார்ஷிக மஹா ஸங்கம்.

---:O:---

திருவல்லிக்கேணி
விபவ ஹூ சித்திரை மீ 1 வ

தாஸர்களுடைய விஜ்ஞாபநம்:

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதினெட்டாவது வார்ஷிக மஹா ஸங்கத்தை, ஸ்ரீ பாகவதோத்தமர்களுடைய நியமநத்தை முன்னிட்டு, ஸ்ரீ மதுராந்தகத்தில் நாளது சித்திரை மீ 9, 10 வ (ஏப்ரல் 21, 22 வ) களில் நடத்துவதாக நிச்சயம் செய்யப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ. உப, மஹா மஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி முதல் திநத்திலும், ஸ்ரீ. உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி இரண்டாவது திநத்திலும் அக்ராஸநத்தை வஹிப்பதாகத் திருவுள்ளம் பற்றி இருக்கிறார்கள். அப்பொழுது யதா பூர்வம் பண்டிதர்களின் உபந்யாஸம் முதலியவை நடைபெறும். அவைகளின் க்ரமம் இப்பொழுது நிர்ணயித்திருக்கிற ப்ரகாரம் மறு பக்கத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. ஸகல ஸ்ரீ வைஷ்ணவ ஆஸ்திக சிரோமணிகளும் அக்காலத்தில் அவ்விடத்தில் இரண்டு திநங்களிலும் எழுந்தருளி யிருந்து ஸதஸ்ஸை ஸ்ரீ சரண்யன் திருவுள்ளம் உகக்கும்படி நடத்திவைக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஆ. ராமாநுஜாசார்யர்
(ஸத்கார ஸபை அத்யக்ஷர்)
கைங்கர்யம் ஸ்ரீநிவாஸாசார்யர்
(ஸ. ஸ. உபாத்யக்ஷர்)
பள்ளிப்பட்டு திருவேங்கடாசார்யர்,
வங்கீபுரம் நரஸிம்ஹாசார்யர்
(ஸ. ஸ. கார்யதர்சிகள்.)

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்,
எஸ். லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்,
(ஸ்ரீ.வை.ஸி. ஸபை கார்யதர்சிகள்.)

ஸ்ரீ:

## விபவஹு சித்திரைமீ 9உ சனிக்கிழமை.

அக்ராஸநாதிபதி:—ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாய க. தேசிகாசார்ய ஸ்வாமி.

காலை 8-மணி முதல் 11-மணி வரையில்

1. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்
2. ஸ்ரீ. உப. வித்வான் இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்
3. ஸ்ரீ. உப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்

மாலை 3-மணி முதல் 6-மணி வரையில்

1. ஸ்ரீ. உப, வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் உபந்யாஸம்
2. ஸ்ரீ. உப, வித்வான் தில்லியம்பூர் சக்ரவர்த்யாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்
3. ஸ்ரீ. உப. வித்வான் திருமழிசை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்

---

## விபவஹு சித்திரைமீ 10உ ஞாயிற்றுக்கிழமை.

அக்ராஸநாதிபதி:—ஸ்ரீ. உப. வித்வான் பு. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.

காலை 8-மணி முதல் 11-மணி வரையில்

1. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்
2. ஸ்ரீ. உப. வித்வான் தேசிக வரதாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்
3. ஸ்ரீ. உப. வித்வான் நாவல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்

மாலை 2-மணி முதல் 6-மணி வரையில்

1. ஸபா ஸம்பந்தமான கூட்டம்
2. ஸ்ரீ. உப. வித்வான் கொடைவாசல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்
3. ஸ்ரீ. உப. வித்வான் காண்டூர் ராமாநுஜாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்
4. ஸ்ரீ. உப. வித்வான் சேரங்குளம் வரதாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்.

ஶ்ரீ:

॥ ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥


# பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் பதினெட்டாவது வார்ஷிக மஹா ஸங்கம்.**

நாம் ஏற்கெனவே விஜ்ஞாபநம் செய்து கொண்டிருக்கிற ப்ரகாரம், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதினெட்டாவது வார்ஷிக மஹா ஸங்கம், ஸ்ரீ மதுராந்தகத்தில் நாளது சித்திரை மீ 9,10உ களில் நடைபெறுகின்றது. ஸ்ரீ மதுராந்தக வாஸிகளான நமது ஸுஹ்ருத்துக்களெல்லாரும் இது விஷயத்தில் மிக்க உத்ஸாஹமுள்ளவர்களாக இருக்கிறார்களென்று நாம் அறிகிறோம். சென்ற பங்குனி மீ 30 உ புதன் கிழமை திநம் அவர்களெல்லாரும் ஒரு ஸங்கமாகச் சேர்ந்து, ஸ்ரீ. உப. வித்வாந் திருக்கள்ளம் திருவேங்கடாசார்ய ஸ்வாமியை அக்ராஸநாதிபதியாக வரித்துக்கொண்டு இந்த வார்ஷிக ஸபை விஷயமாகப் பல தீர்மாநங்களைச் செய்து, அவைகளை அந்த ஸங்கத்தின் கார்யதர்சி மூலமாக நமக்கு நியமித்திருக்கிறார்கள். அவர்கள் சற்றேறக்குறைய இருபது திருநாமங்களடங்கியுள்ள ஒரு ஸத்கார ஸபையை ஏற்படுத்தி, ஸ்ரீ.உப.ஆ. ராமாநுஜாசார்ய ஸ்வாமியை (ரிடயர்ட் டெபுடி கலெக்டர்) அதற்கு அத்யக்ஷராகவும், ஸ்ரீ. உப. கைங்கர்யம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை உபாத்யக்ஷராகவும், ஸ்ரீ. உப. பள்ளிப்பட்டு திருவேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. வங்கீபுரம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி இவ்விருவர்களைக் கார்யதர்சிகளாகவும் வரித்து, இன்னும் இதற்கு மேல் கொண்டு ஸங்கத்தின் ஸித்திக்கு அபேக்ஷிதமான வேறு ஸம்விதாநங்களையும் எவ்விதக் குறைவுமின்றிக்குச் செய்து வருகிறார்கள். ஆகையால், ஸங்கம், ஸ்ரீசரண்யன் திருவுள்ளம் உகக்கும்படி நடைபெறுமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இந்த ஸங்க விஷயமாக நாம் ஒரு விசேஷ விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகின்றோம். அதை ஸங்கத்தில் அந்வயிக்கும் ஆஸ்திகர்களெல்லாரும் பராமர்சித்து, அதன் நிறைவேற்றத்திற்கு

வேண்டுவனவான ப்ரயத்நங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். கலி மஹிமையால் நமது ஸநாதந தர்மங்களெல்லாம் லுப்தங்களாகி வருகின்றன வென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவைகளை ஆத்யந்திகமாக லோபம் அடைய வொட்டாமல் பல ப்ரயத்நங்கள் பல பெயரால் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் ஒருவராவது சரியானபடி இந்த அதர்ம ப்ரசாரத்தின் மூல காரணத்தை விசாரித்து, அதற்கு அநுரூப மான ப்ரதீகாரங்களைச் செய்து வருவதாக நமது புத்தியில் தோன்றவில்லை. நமது பாலர்களை, பால்யத்தில் நமது பெரியோர்களுடைய ஸம்ஸர்க்க மின்றிக் கும் ஸதாசார மில்லாம லிருக்கும் இதர தேச வாஸிகளுடைய ஸம்ஸ்காரம் ஸங்க்ரமிக்கும் படிக்கும் நாம் அநாதரித்து வரும் வரையில், தர்மத்தை ஸம் ரக்ஷிப்பதற்காக நாம் செய்யும் ப்ரயத்நங்க ளெல்லாம் நிஷ்பலங்களாகவே போய்விடும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ப்ராதஸ் ஸ்நாநாதிகள் இல்லாமலும் ஸந்த்யா வந்தநாதிகள் இல்லாமலும் மனம் போனபடி ஆசரிப்பவர்களாகவும், மஹர்ஷி ப்ரப்ருதிகளான நமது பெரியோர்களின் கௌரவாநபிஜ்ஞர்களாக வும் வளர்ந்து வரும்படி நமது பாலர்களை நாம் விட்டு வந்தால், நமது தர்மம் எவ்விதத்தில் ஸம்ரக்ஷிதமாகும்? நமது பாலர்களெல்லாரும் இங்க் லீஷ் பாஷாப்யாஸத்திற்காக தமது மாதா பிதாக்கள் இருக்குமிடத்தை த்ய ஜித்துவிட்டு விசித்ரமான நடவடிக்கைகளை யுடையவும் கேவல ஸங்க ஸங்கி களாகவு மிருக்கும் பத்தந வாஸிகளுடைய மத்யத்தில் வஸித்து வரு கிறார்கள். ஒவ்வொரு வித்யா சாலையிலும் இப்பொழுது இந்த பாலர் களுடைய ஸௌக்யாதிகளை உத்தேசித்துப் போஜந சாலைகள் ஏற்பட் டிருக்கின்றன. அவைகளில் இஷ்டப்படி புஜித்துகொண்டு பெரியோர் களுடைய சிக்ஷையின்றிக்கே வர்த்தித்து வரும் அந்தப் பாலர்களுடைய ஆசாரங்களும் மநோபாவங்களும் எப்படிப்பட்ட வைபரீத்யத்தை அடை கின்றன வென்பது எல்லாருக்கும் விதிதம். பாஷாந்தராப்யாஸம் அநிவார ணீயம்; அதை உத்தேசித்துப் பெரிய பத்தந வாஸமும் அவச்யம் ஆச்ரயிக்க வேண்டியதாகவே இருக்கின்றது; அதற்காக நாம் எல்லாரும் வீடு வாசல்களை த்யஜித்துவிட்டு பத்தநங்களில் போய் வஸிப்பது என்பதும் துஸ்ஸாத்யமான கார்யம். இந்த ஸந்தர்ப்பத்தில், நமக்குப் பரம்பரையாக ப்ராப்தமா யிருக் கும் ஆசாரமும் வாஸனையும் நமது பாலர்களைப் பரித்யஜிக்காமல் இருக்கும் படியான மார்க்கத்தை நாம் தேடுவது நமது தர்மமன்றோ? பூர்வர்களுடைய ஆசாரம் ஸம்ரக்ஷிக்கப்பட்டு வந்தாலொழிய நமது ஸநாதந தர்மம் எவ் விதத்தில் நிலைபெறும்? இதை ஆஸ்திகர்க ளெல்லாரும் சற்றுக் கவனிக்க வேண்டும். நமது ஆசாரங்களில் நமக்கு விச்வாஸமும் கௌரவ புத்தியும் இருக்கின்றன வென்பது உண்மையேயானால், அவைகளைச் சரியானபடி ஸம் ரக்ஷிக்க நாம் முயல வேண்டியது அவச்யமே.



மதுராந்தகம் ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்—பிரபவஹு சித்திரைமீ

214